**an International CBSE Finger Print School**
**Coimbatore**

# இயல் 3.2 - படம் இங்கே! பழமொழி எங்கே!

GRADE- V

QUESTION BANK

## அ) வினாக்களுக்கு விடையளி.

1. **பழமொழி என்பது யாது?**

நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகள் பழமொழிகள் ஆகும்.

2. **கிளி, யாருக்கு மாம்பழம் தருவதாகக் கூறியது?**

தான் காட்டும் படத்திற்குரிய பழமொழியைக் கூறுபவர்களுக்கு கிளி, மாம்பழம் தருவதாகக் கூறியது

3. **கிளியைப் 'பழமொழிக் கிளி' என அழைக்கக் காரணம் என்ன?**

மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் கிளி ஒரு படத்தைக் மரப் பொந்திலிருந்து எடுத்துக் காட்டும். அந்தப் படம் உணர்த்தும் பழமொழியைச் சிறுவர்கள் கூறிவிட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால், அதைப் 'பழமொழிக் கிளி' என்றும் ஆசையாக அழைப்பார்கள்.

4. **பழமொழி பற்றிய நீதி நூல் எது?**

பழமொழி பற்றிய நீதி நூல் பழமொழி நானூறு.

5. **கிளி எங்கு இருந்தது? அதன் பெயர் யாது?**

கிளி பழையனூர் மாந்தோப்பில் இருந்தது. அதன் பெயர் செல்லம்மா.

6. **நாம் அறிந்து கொண்ட பழமொழிகளை எழுதுக.**

- யானை வரும் பின்னே! மணியோசை வரும் முன்னே!
- இக்கரைக்கு அக்கரை பச்சை
- ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்.
- ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி.
- காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
- அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்